# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.155 /2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1 P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கௌரிசங்கர் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : தியாகராஜன் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலுக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.01.2026.

**எதிரி காவலில் இருந்து நீதிமன்ற காவலுக்கு ஆஜர்படுத்தப்பட்டார்**

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை இந்திராநகரில் வசித்து வருகிறேன். காளியம்மள் அன் கோவில் விற்பனை மேலண்மை பிரதிநிதியாக வேலை செய்து வருகிறேன். நான் தினமும் தாராபுரம் ரோட்டில் எனது வாகனத்தில் ஸ்பிலண்டர் TN 78 T 6473 இரு சக்கர வாகனத்தின் காளியம்மன் அன் கோ கடைக்கு வந்து அங்கு நிறுததி வேலை செய்வேன் குடோன் ம்றும் இதர இடத்திற்கு சென்று விட்டு காளியம்மன் அன் கோ வந்து நிறுத்தி பின்னர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு செல்வது வழக்கம். கடந்த 11.03.2023 ம் தேதியன்று நான் எனது வண்டியை எடுத்து வந்து கடைக்கு முன்பாக நிறுத்திவிட்டு குடோன்க்கு சென்று விட்டு மாலை 6.30 மணிக்கு கடைகது கிழபுறமாக வாகனத்தை நிறுத்தி விட்டு கடைகதுள் சென்று விட்டேன். மீண்டும் வேலையை முடித்துவிட்டு 8.45 மணிக்கு மேல் நான் நிறுத்தியிருந்த வாகனத்தை பார்த்த போது வண்டி அங்கு இல்லை.
2. பின்னர் நான் அக்கம் பக்கம் தேடி பார்த்தேன். பின்னர் கடையில்

உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை செக் செய்த பார்த்த போது பச்சை நிற கோடு போட்ட சட்டையும் வெள்ளைநிற வேட்டியும் போட்டிருந்த ஒரு நபர் எனது வண்டியை எடுத்து பழனி செல்லும ரோட்டில் எடுத்து சென்றது தெரியவந்தது. எடுத்த சென்றவர் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனத்தை நிறுத்தி உள்ளாரா என்று தேடி பார்த்தோம். 2-3 நாட்களில் உடுமலையில் சுற்றியுள்ள வாகன நிறுத்தும்இடங்களில் சென்று போய் பார்த்தேன். வாகனத்தின் மதிப்பு ரூ. 35,000/- ஆகும். 15.03.2023 ம் தேதி நான் காவல்நிலையம் சென்று இரவு 8.30 மணிக்கு மேல் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள விவரம் தெரியும். **புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர் எனது பணி சுமாராக இரவு 10.45 மணிக்கு முடியும். போலிசார் கடைக்கு வந்தார்கள். சிசிடிவி கே மரா பதிவுகளை சுதர்சன் என்பவர் மூலமாக வைத்து பார்வையிட்டு பின்னர் தரவிறக்கம் செய்தார்கள். சோனி பெண்டிரைவ் மூலமாக சுதர்சன் தரவிறக்கம் செய்து போலிசாரிடம் ஒப்படைத்தார். நானும் சுதர்சன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பெண்டிரைவ் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ. 2 என குறியீடு செய்யப்படுகிறது.**
4. பின்னர் ஒரு மாதம் கழித்து போலிசார் என்னை காவல் நிலையம் அழைத்து வந்து சிசிடிவி பதிவில் வந்த நபர் அங்கிருந்தார். அவர் பெயர் யூசுப் என தெரிவித்தார். போலிசார் விசாரணைக்கு பின்னர் வாகனத்தை மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காட்ட பழனி ரோட்டில் பாலப்பம்பட்டி டாஸ்மார்க்கடைக்க பின்புறம்உள்ள முள்ளு செடிமறைவில் வாகன்ம இருந்ததை யூசுப் அடையாளம் காட்டினார். நான் எனது வாகனத்தை அடையாளம் காட்டினேன். வாகனத்தை போலிசார் எனது வாகனத்தை கைப்பற்றினார்கள். அப்போது உடன் வீரா மற்றும் காஜாமைதின் ஆகியோர் இருந்தார்கள். போலிசார் நீதிமன்றத்தில் வாகனத்தை ஒப்படைத்தார்கள். நான் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டேன். வாகனத்தை நான் இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன்.
5. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான் என்னுடைய வாகனம். **வாகனத்தின் புகைப்படம் அசா.ஆ .3 என குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள பெண்டிரைவ் தான் நான் ஒப்படைத்தது. பெண்டிரைவ்வின்

புகைப்படம் அசா.ஆ .4 என குறியீடு செய்யப்படுகிறது. வாகனத்தை திருடி சென்று மறைத்து வைத்திருந்த இடத்தை அடையாளம் காட்டிய எதிரியை நான் அடையாளம் காட்ட இயலும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள ஆஜர் எதிரி தான் அவர். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள். யூசுப் கேரளாவை சேர்ந்தவர் என்று கூறினார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜரான எதிரி தனது வழக்கறிஞர் பொள்ளாச்சி சென்று விட்டதாக தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 155/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 2 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோபாரதி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வனராஜன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.01.2026.

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை சேரன்நகரில் வசித்து வருகிறேன். வர்ஷினி டு வீலர் ஏஜென்சில் தற்போது மேலாளராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் போது உடுமலை காளியம்மள் கோவில் விற்பனை பிரதிநிதியாக வேலை செய்து வந்தேன். அந்த சமயத்தில் அசா.1 என்னுடன் பணி புரிந்து வந்தார்.சுமார் 3 வருடத்திற்கு முன் 11.03.2023 ம் தேதி இரவு 8.40 மணிக்கு மேல் போன் பேசுவதற்காக கடைக்கு முன்பாக வந்து பேசி கொண்டிருந்த போது கட்டம் போட்ட சட்டையும் வேட்டி கட்டி இருந்த நபர் ஒருவர் வண்டியை தள்ளி கொண்டு சென்றார். அவர் எங்களது கடையின் வாடிக்கையாளர் என்று நினைத்து கொண்டேன். அவர் பேருந்து நிலையம் செல்லும்வழியில் அவர் சென்றார்.
2. பின்னர் இரவு நேரம் சங்கரின் வண்டியை காணவில்லை என்று தேடினோம். பின்னர் வாடிக்கையாளர்யாரேனும் மாற்றி எடுத்துசென்று விட்டார்கள் என்று நினைத்து அக்கம் பக்கத்தில் தேடினோம். சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்த போது தான் வாகனத்தை தள்ளி கொண்டு சென்ற நபரும் சங்கரின் வாகனத்தை

திருடி சென்ற நபரும் ஒருவர் என்று தெரியவந்தது. இது சம்பந்தமாக கௌரசங்கர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்.போலிசார் என்னைஇது சம்பந்தமாக விசாரித்தார்கள். வண்டியை தள்ளி கொண்டு சென்றவரை தற்போது அடையாளம் காட்ட இயலுமா என்றால் இயலும் , நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரி போன்று தான் இருந்தது. தற்போது தாடி வைத்துள்ளார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜரான எதிரி தனது வழக்கறிஞர் பொள்ளாச்சி சென்று விட்டதாக தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC No. 155/2023 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 6 | P.W.3 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோஜ்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | அர்ஜுனன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.01.2026.

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை இந்திராநகரில் வசித்து வருகிறேன். கடந்த 4 வருடமாக காளியம்மன் அன் கோவில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.03.2023 ம் தேதி என்னுடன் வேலை செய்யும் கௌரிசங்கர் வண்டி காணவில்லை என்று போலிசாரிடம் புகார் கொடுத்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் எங்கள் கடைக்கு வந்து கடந்த 15.03.2023 ம் தேதி இரவு 11.00 மணிவாக்கில் சம்பவ இடத்தை வரைபடமாக வரைந்து லேண்ட் மார்க் விவரங்களை குறிப்பிட்டு அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் புவனேஷ்வரன் என்பவரும் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சி கையொப்பம் செய்தோம்.
2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ. 5 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் வரைபடம் வரைந்த பின்னர் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்து விட்டு சென்றனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜரான எதிரி தனது வழக்கறிஞர் பொள்ளாச்சி சென்று விட்டதாக தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 155/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 9 P.W.4 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கருப்புசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 29.01.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் விளாமரத்துபட்டியில் வசித்து வருகிறேன். காளியம்மன் அன் கோவில் செல்போன் சேல்ஸ்மேனாக கடந்த 5 வருடமாக வேலை செய்து வருகிறேன். கடந்த 24.04.2023 ம் தேதி கௌரிசங்கர் என்பவரின் வாகனம் திருட்டுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் சம்பத் குமார் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்தார். நானும் காஜா மைதின் என்பவரும் அங்கு சென்ற போது யூசுப் என்பவரம் போலிசாரும் இருந்தார்கள். யூசுப் எனப்வர் வாகனத்தை திருடியதாக ஒப்புக் கொண்டார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் காஜா மைதின் என்பவரும் சா'சி கையொப்பம் செய்தோம்.
2. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அசா.ஆ.6 என குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் நானும், காஜா மைதின் மற்றும் போலிசார், கௌரிசங்கர் ஆகியோருடன் சென்று பாலப்பம்பட்டி டாஸ்மார்க் கடைக்கு பின்புறம் போலிசார் வாகனத்தை கைப்பற்றினார்கள்.
அதற்காக நானும் காஜாமைதின் என்பவரும் சாட்சி கையொப்பம்

செய்தோம்.

3. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகசர் அசா.ஆ.7 என குறியீடு செய்யப்படுகிறது.** வாகனத்தை திருடியதாக ஒப்புக் கொண்ட யூசுப் என்பவரை தற்போது என்னால் அடையாளம் காட்ட இயலும். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள நபர் தான் அவர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆஜரான எதிரி தனது வழக்கறிஞர் பொள்ளாச்சி சென்று விட்டதாக தெரிவித்தார்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.